


மதுரவாயல் சட்டமன்ற தொகுதியில்
தனது பொற்கரங்களால் வீட்டுமனை பட்டா
வழங்க வருகைதரும்

கழக இளைஞரணிச் செயலாளர்
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

# இளந்தலைவர்

அவர்களே வருக! வருக!!

மதிப்புமிகு **டி.ஆர்.பாலு** B.Sc.MP
கழகப் பொருளாளர் – மக்களவைக் கழகக் குழுத் தலைவர்

மாண்புமிகு **K.K.S.S.R.இராமச்சந்திரன்**
வருவாய்த்துறை - பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

மாண்புமிகு **சு.முத்துசாமி**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர்

மாண்புமிகு **மா.சுப்பிரமணியன்** B.A.,LLB.
மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் - தென்சென்னை மாவட்ட கழகச் செயலாளர்

திருமிகு.காரம்பாக்கம் **க.கணபதி** MLA.
மதுரவாயல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் - மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **பிரியாராஜன்** — பெருநகர சென்னை மாநகராட்சி மேயர்
திரு. **ச.அரவிந்த்ரமேஷ்** MLA. — சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **AMV.பிரபாகரராஜா** MLA. — விருகை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
திரு. **மு.மகேஷ்குமார்** — பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர்

திரு. நொளம்பூர் **வே.ராஜன்** — 11வது மண்டலக்குழுத் தலைவர்
திரு. **அ.ம.துரைவீரமணி** — வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் - அயப்பாக்கம் மு..ம.தலைவர்

M.கிருஷ்ணமூர்த்தி S.ஆறுமுகம் ம.குமார் குப்புராஜேந்திரன்
P.S.துரைசாமி M.முரளி S.அமல்ராஜ் K.முத்துராமன் K.ஜெகதீசன்
R.சிவலிங்கம் K.சரவணன் M.A.V.சீனிவாசன்

S.வெங்கா M.A.வீரராகவன் K.சரவணன் MAV.சீனுவாசன் R.வினோத் R.விஜய் M.அமுல்ராஜ்
S.பாலமுருகன் S.பரத் C.சிவராமகிருஷ்ணன் S.ரவி D.மோகனவேல் P.சேகர் V.T.அரசு
P.பொன்முத்துரமேஷ் A.கணேசன் K.பிரதாபன் V.ராஜேந்திரன் N.உடையப்பன்
J.அமுல்ராஜ் K.G.ஜெயவேல் A.கைலாசம் D.மோகன்ராஜ் S.சுந்தர்ராஜன் M.K.தணிகாசலம்
K.பழனியப்பன் G.மூர்த்தி P.பாக்கியராஜ் K.பாரதி K.ஹேமகுமார்
ஸ்வீட் கிருஷ்ணா S.சத்யா நாராயணன்


அன்புடன் வரவேற்கும், **வே.மதியழகன்** MA.BL.,
மதுரவாயல் தெற்கு பகுதி கழகச் துணை செயலாளர் - மேனாள்நகர் மன்ற தலைவர் வளசரவாக்கம்

**த.ரமேஷ்** — 149வது வட்ட கழகச் செயலாளர்
திருமதி. **செல்வி ரமேஷ்** MC. — 149வது வார்டு மாமன்ற உறுப்பினர்
வழக்கறிஞர் **இரா.சுரேஷ்பாபு** MA. M.Phil. B.L., — மதுரவாயல் தெற்குப் பகுதி அமைப்பாளர்-வழக்கறிஞர் அணி

149வது வட்ட தி.மு.க - வளசரவாக்கம் - மதுரவாயல் தெற்கு பகுதி - சென்னை தெற்கு மாவட்டம்

jagan adds 98417 02981





தோற்றம் : 05.06.1936 மறைவு : 13.10.1975

## கலைஞர் கடிதம்

### "பவளவண்ணன் ஒரு பாடம்!"

உடன்பிறப்பே,

இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை என்று தத்துவம்கூற யார் தயவும் தேவை யில்லை. அது நமக்கே நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். அதிலும் என்னைப் பொறுத்தவரையில் எந்த மகிழ்ச்சிகர மான நிகழ்ச்சியையும் எண்ணிப் பார்த்து இன்பமடையும் நிலைமை ஒரிருமணி நேரத்திற்கு மேல் நீடித்தது கிடை யாது. என்னுடன் நெருங்கிப் பழகுற நண்பர்கள், கழக முன்னணியினர் இதனை நன்கு அறிவார்கள்.

அறந்தாங்கி மாநாட்டுச் சிறப்பு குறித்து வெற்றிக் களிப்புடன் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். தாம்பரத்தில் நாளிதழை வாங்கிப் பார்த்தபோது, அறந் தாங்கி பற்றிய இனிய நினைவுகள் எல்லாம் எங்கேயோ பறந்தோடிவிட்டன. என் உயிரனைய உடன்பிறப்புக்களில் ஒன்றான பவளவண்ணன் மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக அந்த இதழிலே வந்த செய்தி, என் நெஞ்சிலே செந்தீயாகத் தாக்கிச் சுட்டது. சிரித்த முகமும் சிரம் தாழ்த்தி என் எதிரில் நிற்கும் பணிவும், கழகக் காரியங்கள் ஆற்றுவதில் எறும்பின் சுறுசுறுப்பும், என்னிடத்திலும், கழகத்திடத்திலும் இதயத்தைப் பறி கொடுத்த பாசமும் கொண்ட அவரைப் பார்க்கும்போ தெல்லாம், "உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள்! வீணாகக் கெடுத்துக் கொள்ளாதே!" என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன். என் செய்வது; காலில் விழுவதுபோலக் கெஞ்சிக் கேட்டும், மன்றாடியும்கூட என் வேண்டுகோளைக்கேட்காமல் புறக்கணித்துவிட்டு பிடிவாத மாக உடலைக் கெடுத்துக்கொள்ளும் என் உயிர் நண்பர் களின் பட்டியலில்தான் பவளவண்ணனும் இடம் பெற்று விட்டார்.

உடன்பிறப்பே! நீயும் நானும் எத்தனை நாளைக்கு உயிர்வாழப் போகிறோமோ; அது வேறு விஷயம்! அதற்காகத் தெரிந்தும் நச்சுப் பாம்பை எடுத்து நாக்கிலே விட்டுக் கொள்ளக் கூடாதல்லவா?

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு சிலை வைக்கவேண்டுமென்று உறுதியாக நின்றவர் பவள வண்ணன் தான்!

என் வேண்டுகோளைக் கேட்டுச் சிலைவைக்கும் முயற்சி யைக் கைவிட்ட அந்தக்காளைப் பருவத்தினன், தன் உயிருக்கு உலைவைக்கும் எனத் தெரிந்தும், நானும் பல முறை வேண்டியும், அதைமட்டும் கேட்க இயலாமல், குழந்தைகளையும் குடும்பத்தினரையும் மட்டுமல்ல; நம்மையும் விட்டுப் போய்விட்ட அவலத்தை எப்படித் தான் தாங்கிக் கொள்வது?

ரயிலில் இருந்து இறங்கியதும், அவசர அவசரமாக மருத்துவமனைக்கு ஓடுகிறேன்—என் ஆருயிர் உடன்பிறப்புக் களில் ஒன்றை எப்படியும் பிழைக்கவைத்துவிட வேண்டு மென்று! ஆனால் என் வேகத்தை வெற்றிகண்டுவிட்டது சாவு! நான் போய்ச் சேருவதற்குள் அந்தச் சிங்கம் போய் விட்டான்!

அவனுக்காக நான் அழுவதா?

இன்னும் சிலபேர் அவனைப்போலத் தங்களைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்களே; அவர்களை நினைத்து அழுவதா?

அவர்களுக்குப் பவளவண்ணனுடைய பாடமாக இருக் கட்டும். தன் சாவின் மூலம், அந்தத் தங்கத் தம்பி, வேறு சில உடன்பிறப்புக்களின் சாவைத் தடுத்தான் என்றுவது, நிலை உருவாகட்டும். அந்தப் புதுநிலை கண் டாவது நான் ஆறுதல் பெறுகிறேன். நமது அண்ணன் நமது கையில் கொடுத்த கொடியும், நம் நெஞ்சில் பதிய வைத்த இலட்சியமும், தமிழர்க்கென உருவாக்கிக் கொடுத்த அரசும், புவியெங்கும் புகழ் பரப்பிட — அணுவளவு களங்கமும் அண்ணா உருவாக்கிய கழகத்திற்கு ஏற்படாமல் காத்திட—என் அன்பு உடன்பிறப்பே! நீ உறுதி கொண்டு நடந்திடுக! தாழ்ந்துவிட்டது என்று தருக்கர்களால் கூறப்பட்ட கழகம், இன்று தலைநிமிர்ந்து "ராஜநடை" போடுவதை நாடு காண்கிறது.

மாற்றாரும் நமது மாண்பு உணர்ந்து மகிழ்ந்து பாராட்டுகின்றனர்.

பிரிந்து சென்ற நமது உண்மையான உடன் பிறப்புக்கள், சிலர் தாங்கள் சென்ற இடத்தின் தகுதியைப் புரிந்து கொண்டு, இன்று தெளிந்து நம்மிடையே திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கழகமொன்றே இருள்போக்கும் கதிரவன் என இந்திய அரசியல் அரங்கம் இன்று விமர்சித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் கழகத்திற்கு நமது உழைப்பு கடுமை யாகத் தேவைப்படுகிறது. நேர்மையான உழைப்பு— நாணயமான செயல்—வலிவான உடல்— திடமான உள்ளம்—இத்தனையும் தேவை. இதனைக் கெடுத்திடக் கூடிய தீங்கு, கடுகத்தனையும் தலைகாட்டாமல் பாடுபடு வோம். இந்தச் சூளுரையைப் பவளவண்ணன் கல்ல றைக்கு முன்னால் எடுத்துக்கொள்வோம்! சொல்லித் தீர வேண்டியதை ஒளிவுமறைவின்றிக் கட்சியின் நன்மைக் காகச் சொல்லிவிட்டேன். அதற்காக என்னை மன்னித்துக் கொள்.

அன்புள்ள,
மு. க.
17—10—75

சென்னை மாநகர முன்னாள் துணை மேயர்

# சி.பி.பவளவண்ணன்

அவர்களின்

50 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

என்றும் உங்கள் நினைவில்
மகன் : **சி.பி.இறைவன்**